யாழ். குருநகர்

புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை

## அருள்திரு

# பீ. எம். இம்மானுவேல்

அடிகளாரின்

குருத்துவ வாழ்வின்

# 25

## ஆண்டு

# வெள்ளிவிழா

**1991 - 12 - 21**

# குருத்துவ
# வெள்ளி விழாக் காணும்



## அருட்தந்தை பீ. எம். இம்மானுவல் அடிகளார்

பங்குத்தந்தை
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர்,
யாழ்ப்பாணம்.

பேரருள்திரு.

## வ. தியோகுப்பிள்ளை

ஆண்டகை

யாழ். மறைமாவட்ட ஆயர்

அவர்களின்

# ஆசிச்செய்தி



இறைபணியில் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, வெள்ளிவிழாக் காணும் அருட்திரு. பீ. எம். இம்மானுவல் அடிகளார் தொடர்ந்தும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மறைபணியாற்ற இறைவன் அருள்புரிய வேண்டுமென ஆசிக்கின்றேன்.

கடமை உணர்வோடு கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவரும், ஈகை, இரக்கம் கொண்டவருமான இவர் இறைபணியோடு சமூகப் பணியும் ஆற்றி எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். வறுமைக்கோட்டின் கீழேயுள்ள மக்களின் கல்வி, கலை, பண்பாட்டு வளர்ச்சிக்காகவும், அவர்களின் துன்பதுயரங்களிலே பங்கெடுத்து, மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்களின் பொருளாதாரத்தை வளம் படுத்தவும் அரும்பாடுபட்டு அயராது உழைத்து வருகின்ற இவரை இந்நன்னாளிலே வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க அவரது மக்கள் தொண்டு!

வளர்க அவரது சமயப் பணி!!

✝ வ. தியோகுப்பிள்ளை
யாழ் ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
13-12-91

# அருள்தந்தை மைக்கல்சாமி அடிகளார்

## யாழ் மறைமாவட்ட முதல்வர்

### அவர்களின்

# ஆசிச்செய்தி

அருள்திரு. P.M. இம்மானுவேல் அடிகள் பங்குத் தந்தை என்கிற பணியை அலங்கரிப்பவர். மன்னாரில் உதவிக்குருவாக இருந்த காலம் தொடக்கம் பல பெரும் பங்குகளில் பணியாற்றிய பொழுதெல்லாம் பணி சிறக்கும்; பங்குகள் சிறப்புறும். அதற்குரிய சிறப்பு ஆர்வமும், ஆற்றலும் அவரிடம் உண்டு. மக்களுடைய பல்துறை முன்னேற்றங் களிலும் கவனம் செலுத்துபவர்.

இன்னல்கள் நிறைந்த இக் காலத்தில் குருநகர் பங்கில் தொண்டு செய்யும் இவர் தமது குருத்துவ வெள்ளி விழாவை கொண்டாடும் இவ்வேளையில் பங்கு மக்கள் அனைவருடனும் மகிழ்ச்சி கொண்டு, இறைவனுக்கு நன்றி கூறி தொண்டு மென்மேலும் பலன் அளிக்க இறை ஆசி வேண்டி என் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

செ. மிக்கேல்சாமி,
அ. ம. தி.


யாழ் மரியன்னை பேராலய

பங்குத்தந்தை

அருட்திரு.
S. H. ஜெபநேசன்

அடிகளாரின்

# ஆசியுரை



அருட்திரு. P. M. இம்மானுவல் அடிகளார் இறைவனின் குருவாக பணிபுரிந்து 25 ஆண்டுகள் நிறைவுபெறும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதில் பேருவகை கொள்கின்றேன்.

சுவாமி அவர்களை காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியிலும், யாழ் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலும், அம்பிற்றிய தேசிய குருமடத்திலும் மாணவனாகவும், மன்னார் மறை மாவட்டதித்ல் எனது சக குருவாகவும் அடம்பன், விடத்தல் தீவுப் பங்குகளில் எனது துணைப் பங்குக் குருவாகவும், தற்பொழுது யாழ். மறைமாவட்டத்தில் எனது சகோதர குருவாகவும் நான் நன்கு அறிவேன்.

''பாதர் P. M.'' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இவர் நிலத்தில் தம் பாதங்களை நன்றாகப் பதித்து சாதாரண ஏழை எளிய மக்களுக்குத் தன் அன்பைச் சொரிந்து பகிர்ந்து வாழ்பவராவார். இவருக்கு எண்ணிக் கொடுக்கத் தெரியாது, அள்ளிக் கொடுக்கத்தான் தெரியும். இவர், தான் மாணவனாக இருக்கும் காலம்தொட்டே இந்த நற்பண்புகளையுடையவராய் விளங்கினார்.

இவரது மகிழ்ந்து மலர்ந்த வாழ்வில் ஒரு மைல் கல்லாக அமைந்த இன்றைய நாளிலே இறைவனின் நிறை ஆசீரை வேண்டி, இறை மந்தைகளை பரிசுத்தரை நோக்கித் தொடர்ந்து வழிநடத்திச் செல்ல யாழ். மரியன்னை பேராலய துணைக் குருக்கள், அன்பு நிறை பங்குமக்கள் அனைவர் சார்பிலும் வாயார வாழ்த்துகின்றோம்.

குருமனை,
யாழ் மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

21-12-1991

# நான் கண்ட அருள்தந்தை
# P. M. இம்மானுவல் அடிகளார்

அருள் திரு. வணக்கத்திற்குரிய P.M. இம்மானுவேல் அவர்களின் 25 ஆவது வருட கொண்டாட்டங்களையிட்டு இந்த செய்தியை வெளியிடுவதில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன்.

அவர் சேவை புரிந்த ஒவ்வொரு இடத்திலும் அவர் சமூகங்களுக்கு ஆற்றிய சேவை பெரிது. குருநகர் சமூகத்திற்கும் கூட அவரால் ஆற்றப்பட்டு வரும் சேவை சொற்களால் கூற முடியாது.

அவரை நான் 1988 முற்பகுதியில் முதல் முதலாக சந்திக்க வேண்டி நேரிட்டது அப்பொழுது அவர் குருநகர் சமூகத்திற்கு செய்ய வேண்டிய உதவிகளையிட்டு கனவுகள் காண்பவராக இருந்தார். உலகத்தில் பெரிய காரியங்களை செய்தவர்கள் ஒரு காலத்தில் அவற்றை கனவுகண்டவர்களாக இருக்கின்றார்கள். அருள் திரு வணக்கத்திற்குரிய இம்மானுவேல் அவர்களோடு பழகியதில் நான் கண்டதென்னவென்றால் அவர் தன் கனவுகளை நனவாக்குவதற்கு வேகத்தோடு செயற்படுவர். அவர் கண்ட கனவுகள் பல உலகதரிசனம் குருநகர் சமூகத்திற்கு செய்த உதவிகளில் வெற்றிகாண வைத்தன.

அவருக்கு என் வாழ்த்துகளையும் மேலும் நீடித்தகால சேவைக்கு அவருக்கு ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும் வேண்டி நிற்கின்றேன்.

திரு. பென் குணரெத்தினம்
உலகதரிசன வடபிராந்திய இணைப்பாளர்

# விரக்தியுற்றோரின் கலங்கரை விளக்கம்

**வே**தத்தின் வித்துக்கள் முளைவிட்ட தீவக பூமியின் ஒரு பகுதி யாம் நாரந்னையிலே இறைபக்தியும் கிறிஸ்தவ விசுவாசமும் இணை யப்பெற்ற பேதுறுப்பிள்ளை மரியாம்பிள்ளைக்கும் அலேசுப்பிள்ளை அன்னம்மாவிற்கும் மைந்தனாக 3-7-1940ல் பிறந்த அன்புக்குழந்தை தான் வண. பிதா பி. எம். இம்மானுவேல் அடிகளாராவர்.

அடிகளார் ஆரம்பக்கல்வியை நாரந்தனை றோ. க பாடசாலை யில் ஆசிரியர் சாமிநாதன் மூலமாகப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் பாடசாலையில் வண. பிதா யோண் மேரி அ. ம. தி. அவர்களின் மூலமாகப் விருத் தியாக்கிக் கொண்டார். 1953ம் ஆண்டின் தொடக்கத்தில் புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும் 1954ம் ஆண்டில் புனித மாட்டீனார் செமினரியிலும், கல்வி பெற்று 1959ல் க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்தார். இறைவனது பெயரையே தன் பெயராகக் கொண்ட அடிகளார் அதே ஆண்டில் இறை உணர்வினால் உந்தப் பெற்று கண்டி மாநகரில் உள்ள அம்பிற்றியா தேசிய குருமடத்தில் தம்மை இணைத்துக்கொண்டார் ஏழு வருட கடுமையான உழைப்பின் பின்பு 1966ம் வருடம் யாழ் ஆயர் பேரருள் ஜே எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருவானவராகத் திருநிலைப் படுத்தப்பட்டு தமது முதற்பலியை யாழ். ஆசனக் கோவிலில் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தார்.

இறைவனின் நற்செய்தி பரப்பும் உதவிக் குரவராக இளவாலை, அடம்பன், விடத்தல்தீவு, மன்னார் ஆகிய பங்குகளில் பணியாற்றத் தொடங்கினார்.

சேவை நலனும், தன்னலம் கருதா உள்ளமும் கொண்ட இவரது இறையுணர்வை மதித்த ஆயர் அவர்கள் இவரைப் பங்குத்தந்தையாக உயர்த்தினார். முதலில் தாளையடியிலும், அதனைத் தொடர்ந்து வங்காலை, வவுனியாவிலும், நாவாந்துறை, ஆனைக்கோட்டை, நவாலியூர் உள்ளடக்கிய நாவாந்துறைப் பங்கிலும், ஈற்றில் கடல் அலைகள் கொஞ்சும் நகராம் குருநகரில் அமைந்துள்ள புனித யாகப் பர் ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்து தமது சேவையைத் தொடரலானார்.

1976ல் வவுனியாப் பங்கில் சேவையாற்றிக்கொண்டிருந்த வேளை அகதிகள் புனர்வாழ்வுக்கான மீட்புத் திட்டங்களில் அருட்டிரு யேம்ஸ் பத்திநாதர் அடிகளார் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து திரு.

கே. சி. நித்தியானந்தா அவர்களது தலைமையில் காந்தீயம் ஆரம்பிக்க முழுமூச்சுடன் எத்தனையோ சிரமங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் விடாமுயற்சியுடன் செயற்பட்டார்.

1981ல் நாவாந்துறைப் பங்கில் பணிபுரிந்தபோது பொதுத் தொண்டுகளாக சனசமூக நிலையங்களும் பாலர் பாடசாலைகளும் அமைத்து அப்பங்கு மக்களை அறிவுத்துறையில் மேம்பட வைத்தது மட்டுமன்றிப் பங்கின் நலன் கருதி ஆலய முன்மண்டபத்தை அமைத்தும், பல பக்திச்சபைகளை உருவாக்கியும் மக்களை இறையரசில் பங்குகொள்ளச் செய்தார். மக்களின் குடிதண்ணீர் வசதிக்காக தண்ணீர்த் தொட்டிகள் அமைத்தும் கிணறுகள் கட்டியும், சுகாதாரத் தேவையின் பொருட்டு மலசலகூடங்கள் அமைக்க உதவியும், ஏழைப் பிள்ளைகளுக்குப் படிப்பு வசதியும் செய்துகொடுத்தார். அப்பங்கு மக்கள் அடிகளாரைப் பற்றிக் குறிப்பிடுகையில் கொடை வள்ளல் என்றும், ஏழைகளின் நண்பன் என்றும் கூறுவது மிகையாகாது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

''கை கொடுக்கும் கல்விக்கு கை கொடுக்க'' புத்திசாலிகளான ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய 1985ல் பஸ்ரியன் உதவித் திட்டத்தை (BEAS) ஆரம்பித்து அதன் தலைவராகவும் பணிபுரிந்து கொண்டு வருகிறார்.

இப்பங்கில் மக்களுக்காக இவர் செய்துவரும் அரும்பணிகள் பல. இவரிடம் உதவி பெறாதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். மக்களின் மகிழ்ச்சிக்காக பாரம்பரிய கலையாகிய நாட்டுக்கூத்தை ஊக்குவிக்கும் அதே வேளை நுண்கலைகளையும் மறந்தாரில்லை பெண்களுக்கான தையல் பயிற்சி நிலயங்களையும், தட்டச்சு வகுப்புகளையும் நடாத்திவரும் வேளை கோவில் கடமையையும் மறந்தாரில்லை. புனித வின்சென்டீபோல் சபை, பூசைப் பரிசாரகர்சபை, மாசில்லா மாதா கூட்டம், இறை இரக்கக் கூட்டம், திரு இருதயக் கூட்டம், புனித சூசையப்பர் கூட்டம், மரியாயின் சேனை, புதுமை மாதா வழிபாட்டுக் குழு, மறை ஆசிரியர் சங்கம் போன்றவற்றை உருவாக்கியும் புனரமைத்தும் வழி நடாத்திச் செல்கிறார்.

''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு''

நாரந்தனையில் பிறந்தாலும்
குருநகரில் எப்படித்தான் வாழ்ந்தாலும்
ஏழைக்கிரங்கும் அகல் விளக்கே
நீ வாழி பல்லாண்டு பல்லாண்டு.

குருநகர் யோகி

# ஆன்மீகப் பணிக்கோர் அருட்தந்தை

நமது குருத்துவத்தின் இருபத்தைந்து ஆண்டு நிறைவைக் காணும் எமது பங்குத் தந்தை அருட்திரு P. M. அடிகளாரை பங்கு மக்களாகிய நாம் நெஞ்சம் மகிழ வாழ்த்துகின்றோம். அடிகளார் பெற்றுக்கொண்ட அருட்கொடைகளுக்காக அவரோடு இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். மேன்மையான தமது குருத்துவ அழைத்தலுக்கு ஏற்ப, மகத்தான பணிகள் புரிந்து, மக்களின் மனங்களைக் கவர்ந்த மாமனிதர் எங்கள் பங்குத் தந்தை. குருத்துவத்தின் மறு பெயரி 'பணி' என்பதனைத் தன் உழைப்பால் உணர்த்திய உத்தம குருவானவர். 'பணிவிடை புரியவே வந்தேன்' என்றுரைத்த கிறிஸ்துவின் பணியையே தன் வாழ்வாக்கி, எமது பங்கு மக்களின் அருள் வாழ்வுக்காக அயராது உழைத்து வரும் தந்தை அவர்கள் எமது மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவராவார். தந்தை அவர்கள் எமக்குச் செய்துவரும் சேவைகளை நாம் மறைக்கவோ அன்றி மறுக்கவோ முடியாது.

தந்தை அவர்கள் பணிபுரிந்த கடந்த நான்கு ஆண்டுகள் எமது பங்கின் ஒளிமயமான காலமாகும். ஆழ்ந்த இறைப்பற்றும், ஆன்மீக வாஞ்சையும் கொண்டவர் எங்கள் பங்குத் தந்தை. 'எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு' என்பதை மனதிற் கொண்டு, எமது பங்கின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஆர்வத்துடன் உழைத்தார். தியானம், செபம், கடமையுணர்வு போன்ற வழிகளில் மக்களை உற்சாகப்படுத்தி, மக்கள் மத்தியில் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை தந்தை அவர்களையே சாரும். விசுவாசிகள் செபங்கள், பாடல்களில் பகதியோடு பங்குகொள்வதும், பலர் வார்த்தை வழிபாடுகளில் பங்கேற்று நிற்பதும் தந்தை அவர்களின் ஊக்கத்தைக் காட்டுகின்றது. தந்தை அவர்கள் மரியன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். மரியன்னையின் வழியாகத்தான் எமது தாய்க்குலத்தின் வாழ்வு பண்படுத்தப்படவேண்டும் என்பதை மனதிற் கொண்டவராய், மரியன்னையின் பக்தியை அர்த்தமுள்ளதாக்கி, வழிபாடுகளை சிறப்புடன் நடாத்தி வைத்தார்.

திருச்சபையின் பணிகளோடு ஒத்துழைப்பது பொதுநிலையினரின் இன்றியமையாத கடமை என்பதை உணர்த்தி, பக்திச் சபைகளுக்குப் புத்துயிர் அளித்து, புதிய பக்திச் சபைகளை உருவாக்கி, அவற்றிற்கு

ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவது பாராட்டத்தக்கதாகும். மாண வர்களின் ஞான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, தந்தைக்குரிய அன்போடும் கரிசனையோ டும் அவர் செயற்பட்டு வருவதை நாம் மறக்கமுடியாது. ஆன்மீக பலமும், செயற்திறனும், புத்திக்கூர்மையும் இறைவனால் அவருக்கு அளிக்கப்பட்ட சிறந்த கொடைகள் என்று அவர் ஆற்றும் பணிகள் எண்பித்துக் காட்டுகின்றன. பங்கில் எத்தனை பணிகள் உண்டோ அத் தனையையும் மனந்தளராது செயற்படுத்தக்கூடிய கிறீஸ்துவின் பணி யாளன் பங்குத் தந்தை அவர்கள். அவர்களின் வழியாக ஆன்மீக பயன்களை அடைந்துகொண்ட நாம் இறைவனுக்கு நன்றி கூறுவ தோடு, அவருக்காகச் செபிப்பதும் எமது கடமையாகும்.

தந்தை அவர்களின் பணியானது ஆலய நிர்வாகத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. எங்கள் சமூகத்திலுள்ள சகலரையும் அவர்களது பணி தொட்டது என்று கூறலாம். 'உலகத்தின் உருவை மாற்றி அமைப்பது கிறீஸ்துவின் பணி'. இதுவே குருத்துவப் பணியுமாகும். இதற்கேற்ப தந்தை அவர்கள் செயற்பட்டார்கள். எங்கள் சமூகத் தின் குறைபாடுகளைப் போக்கப் பல சமூக நலத்திட்டங்களை வகுத் தார்.

'எளியோருக்கு நற்செய்தி சொல்ல' என்ற கிறீஸ்துவின் வார்த் தைக்கு எடுத்துக்காட்டாக தாழ்வுற்ற நிலையில் இருந்த மக்களுக் காக அவர் மேற்கொண்ட பணிகள் பல. பால் அருந்தும் குழந்தை முதல், பிணியினால் வருந்தும் வயோதிபர் வரை தந்தை அவர்களி னால் ஆறுதல் அடைந்தனர். விதவைகள், அனாதைகள், ஊனமுற் றோர், கைவிடப்பட்டவர்கள் மட்டில் அதிக கரிசனை கொண்டு, அவர்களும் பெருவாழ்வு பெறவேண்டும் என்று உழைத்த, தியாக உள்ளம் கொண்ட தந்தையின் பெருந்தன்மையை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். தகுந்த உறைவிடமின்றியும், சுகாதார வசதி யின்றியும் இருந்த மக்களின் இன்னல்களைப் போக்க அவர் பட்ட இடர்கள் பல. எடுத்த கருமத்தை அஞ்சாது செய்து முடிக்கும் தனித் திறமை தந்தை அவர்களுக்கு உண்டு. அவர் வகுத்த திட்டங்கள் சில நிறைவுபெறாவிடினும், அவர் மேற்கொண்ட முயற்சிகளை நாம் பாராட்டி நிற்கின்றோம்.

உலகத்தில் வீரச்செயல்கள் புரிவோர், சாதனைகளை நிலைநாட் டுவோர், உயிர்த் தியாகம் செய்வோர் பாராட்டப்படுகின்றனராயின், எல்லா இன்பத்தையும் துறந்து, இறைவனுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துத் தினமும் தம்மையே பலியாக்கி வரும் குருக்களும் பாராட்டுதலுக்குரியவர்களே. கிறீஸ்துவுக்காகப் பணி புரிபவர்கள்,

துன்பங்களின் பளுவையும் தாங்கி நிற்கின்றார்கள் என்பதற்குச் சான்றாக வாழும் எங்கள் தந்தை அவர்களும் பாராட்டுதலுக்குரியவர். 'நன்மை செய்யும் ஒவ்வொருவனும் ஆண்டவரிடமிருந்து கைம்மாறு பெறுவான்' என்பது உண்மை. தந்தை அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் இறைவனிடத்தில் மகிமைபெறுவதோடு, மக்களுக்கும் பெரும் மழைபோல பயன் தரும் என்பதில் ஐயமில்லை.

தந்தை அவர்களின் சேவையின் நிறைவில் அவரோடு மகிழ்வுறும் நாம் இறைவனுக்கு நன்றி கூறி, தந்தை அவர்கள் ஆன்மீக பலமும் உடல் நலமும் பெற்று வாழ இறையருளை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்க தந்தை! வளர்க அவர் நற்பணி!!

**திருமதி. மாகிறேற் எஸ்பீரியல்**

— * —

# "பெருமை சேர் குருநகர் பெற்றிடும் சோபை"

ஈன்றாள் பெரிது வந்தாள் இன்புற்றாள் அன்னை
சான்றோன் எனத்தந்தான் தந்தை தோன்றுலகில்
திருமறையின் தொண்டே தேடற்கரிதான
குருவாகி இருபைத்தைந்தாண்டு.................

பிறப்பது பிறப்பது மானிடப்பிறவி
பேரின்பம் அடைவது மானிடப்பிறவி
துறப்பது துறப்பது அறமிலா வாழ்வு
தொண்டு செய் அதுவே துயர் கெடும் வேழ்வு
மறப்பது மறப்பது பிறர் செய்யும் தீமை
வாழ்விலார்க்கீயா திருப்பதும் தீமை
பெறப்படும் உண்மை பெரியார் சொல் திண்மை
பெறுவதில் மனுவல் நீ உறுவது உண்மை

அண்டினார்க் கெல்லாம் அன்பினால் அழைந்து
அருளெனும் கருணைத் திருவருள் இணைந்து
மண்டுதல் இல்லா தொண்டுள்ளம் கொண்டு
மக்களின் வாழ்வில் வளம் பல கண்டு
பெண்டிரும் ஆடவர் பெறப்படும் சேவை
பெருமைசேர் குருநகர் பெற்றிடும் சோபை
தொண்டினை மக்கள் கண்டிடவைத்தாய்
தூமறை தொண்டனிம் மனுவலின் தொண்டே.

**ஆக்கம் : பிரான்சிஸ் மிக்கேல்**

# அயராது உழைக்கும் அருள் வள்ளல்

கடையேழு வள்ளல்களின் வாரிசாய், கருணையுள்ளங் கொண்ட காருண்யனாய், கிறிஸ்துவின் பணியை எடுத்துச் செல்லக் குருநகர் பங்குச்சேவை செய்யவந்த ஞானத்தந்தையாம் அருட்திரு. P. M. இம்மானுவேல் அடிகளாரின் சமூகப்பணியின் சிறப்பைக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டும் ஒருவர்தான் அருட்தந்தை P. M. இம்மானுவேல் அடிகளாராவர். அவர்கள் எங்கள் பங்கில் கடமையேற்று ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அன்றுதொட்டு இன்றுவரை ஓய்வு, உறக்கமின்றி ஊர்மக்களின் நலன்களில் கண்ணும் கருத்துமாக இருந்து உழைத்து வருகின்றார். அவர்கள் குருத்துவப்பணிதான் என் பணி. அதுவே யான் கிறீஸ்தவனுக்குச் செய்யுந்தொண்டு. அத்துடன் எனது அந்தஸ்தின் கடமை முடிந்து விட்டதென்று எண்ணி விடவில்லை. ஒருவனை உண்மைக் கிறீஸ்தவனாக்க உதவுவது சமூகசேவை என்பதை உணர்ந்தார். சமூகப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து யாழ், புனித யாகப்பர் ஆலய வளர்ச்சிக்கும், ஊரின் உயர்ச்சிக்கும், எழுச்சிக்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறார்.

அறிவும், ஆற்றலும் மிகுந்த எம் தந்தை தம் பங்குமக்கள் அரசாங்கத்தின் அரக்கத்தனத்தினால் சொல்ல முடியாத துன்பமுற்றுத் துயருறுவதை உணர்ந்தார். அவர்களின் துயர் துடைக்க ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற திருமூலரின் திருவாக்குப்படி செயற்பட்டார். 'உலகதரிசனம்' என்னும் சர்வதேச சமூகத் தொடர் நிலயத்தின்முன் தனது பங்கு மக்களின் துன்பதுயரங்களையும், கஷ்டநஷ்டங்களையும், எளிமை வறுமையையும் எடுத்துரைத்தார். ஏற்றமும் கண்டார். யாழ்ப்பாணத்தில் இருள் மிகுந்த, இடர்ப்பாடுகள் நிறைந்த காலகட்டத்தில் அரும்பணியாற்றிச் சாதனைகள் பல படைத்துள்ளார். படைக்கின்றார். அன்னாருக்குச் சிந்தனை, சொல், செயல் என்பவற்றின் உணர்வுகளின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறோம்.

கிறீஸ்தவன் கிறீஸ்துவைக்காண கிறீஸ்துவாக மாறவேண்டும். இதனைத்தான் இன்று வழிகாட்டிகள் கூறும் வார்த்தைகள் புலப்படுத்துகின்றது. பொது நிலையினராகிய எமக்குக் கிறீஸ்து பல பொறுப்புக்களைக் கொடுத்தார் அன்று. இன்று ஏழைகளுக்கு உதவு

வதன் மூலம், பசியை போக்குவதன் மூலம் முன்னேற்றப்பணிகளில் பங்கேற்று மேம்படுத்துவதன் மூலம் சமூக மாற்ற முன்னேற்றங்களுக்கு வித்திடும் வகையில் தலைமைப்பணிகளை ஏற்பதன் மூலம் நாம் நமது பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்ய முடியும்; ஏழைகளுக்கு உதவ, அனாதைகளுக்கு வழிகாட்ட, முதியோர்க்கு ஆதரவளிக்க, அல்லற்பட்டு அந்தரிக்கும் குடும்பங்களுக்கு இல்லிடம் அமைக்க, இறைவார்த்தைகளை உணரவைக்க, அறிவுரைகளைச் சொல்வதிலும், செய்வதிலும் கிறீஸ்துவைப் பிரதிபலிக்க முடியும் என்பதை, எங்கள் தந்தை அன்புப்பணியாம் சமூகப்பணிமூலம் எடுத்தியம்புகின்றார். கிறீஸ்துவின் பணி சமூகப்பணியே.

பங்குத்தந்தையின் அயரா உழைப்பினால் ஆண்களும், பெண்களும் ஆலயத்தை அண்டிவந்து அழகுபடுத்துவதைக் காண்கிறோம். உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடின்றி ஒன்று கூடி, ஒன்றுபட்ட மனத்தினராய் ஆலய ஆராதனைகளிலும், வழிபாடுகளிலும், மற்றும் விழாக்களிலும் செயற்படுவதைக் காணும்போது பூரிப்படைகின்றோம். இவர் ஒரு புன்னகை மன்னன், பொன்னகையாளன், பாரினர் போற்றும் பரோபகாரி, மக்கள் சேவையாளன். இன் சொல் பேசுவதில், இனிய செயல் புரிவதில் நிகரற்றவர். எடுக்கும் கருமங்களை அழகாக, அமைதியாக, அன்பாக நடத்தி முடிப்பதில் அவர் அவரேதான். எனவே

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு''

என்னும் பொய்யா மொழிக்கு இலக்கணமாய் விளங்குகின்றார் எம் தந்தை.

திருமதி. அ. அகஸ்ரீன்

காற்றும் ஓயலாம்
கடல் அலையும் ஓயலாம்
நாட்டில் நலம்செய்ய
ஓயாத தந்தையே!
நீ!
நீடூழி வாழ வாழ்த்தும்

## குருநகர் சனசமூக நிலையம்



# வாழ்த்துகின்றோம் வாழ்க!!

சத்தியமாம் திருச்சபையின் சற்குருவே வாழ்க.
எத்திக்கும் முரசொலிக்கும் எம் திருவே வாழ்க
போய்ச் சேர்ந்த திசைதோறும் புகழ்சேர்ப்பாய் வாழ்க
போற்றுகின்ற மாமறையின் பொன்விளக்கே வாழ்க
ஏழைகள் துயர் துடைக்கும் வள்ளலேநீ வாழ்க
எல்லோர்க்கும் நல்ல பணி செய்தனையே வாழ்க
ஈர்பத்தும் ஐந்தும் சேர் வெள்ளீ விழாக்கண்ட
இம்மானுவேல் எனும் குரவர் என்றென்றும் வாழ்க
வெள்ளிவிழா, தங்கவிழா, வைரவிழா கண்டு
வையகத்தில் வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம் வாழ்க.

அ. பீற்றர் குமார் குடும்பத்தினர்

மவுண்கார்மேல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

# என்ன கைமாறு செய்துவிட்டோம்?

நாட்டின் சூழ்நிலை காரணமாக குருநகர் மக்கள் தொழிலற்று, சொத்து சுகங்களை இழந்து, வீடு வாசல்ளைத் துறந்து உயிரைக் காப்பதை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு அகதிகளாக இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலே புகலிடம் தேடி அலைந்து அல்லற் பட்டுத் துன்பத்தின் எல்லையிலே தள்ளப்பட்டிருந்த வேளையிலே விடிவெள்ளிபோல் தோன்றி மக்களின் துன்பத்திலே பங்கு கொண்டு அன்பாலும், பண்பாலும் அவர்களை அரவணைத்து அவர்களது வாழ்வின் உயர்வுக்காக அயராது உழைத்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட அருள்தந்தை பீ. எம். இம்மானுவேல் அடிகளார் தனது இறைபணியிலே இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளி விழா காணும் இந்நாளை நாம் நன்றிப் பெருக் கோடு நினைக்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

குருநகர் மக்களின் கல்வி, கலை, பண்பாண்பாட்டு வளர்ச்சிக் காகவும் பொருளாதார சுபீட்சத்துக்காகவும் இறையுணர்வின் மேம் பாட்டுக்காகவும் அயராது உழைத்து வந்தவர் எமது அருள் தந்தை யவர்கள். அவரது உழைப்பின் சிறப்பை எடுத்துக் காட்டும் புனித யாகப்பர் மண்டபம், தண்ணீரைத் தளராது வழங்கும் நீர்த்தாங்கி, புனித யாகப்பர் புனர் வாழ்வுக் கழகம், ஆலய வழிபாட்டு முறை களும் பக்திசபைகளின் செயற்பாடுகளும், தொழில் வளர்ச்சிக்குரிய தொழிற் கூடங்கள், கல்வி, கலை மேம்பாட்டுக்குரிய கல்விக் கூடங்கள், இளைஞர்களையும் யுவதிகளையும் ஏன் முதியோர்களையும் சிறுவர் களையும் ஊக்கப்படுத்தும் கல்வி கலைப் போட்டிகள், அவர் மேடை யேற்றிய நிகழ்ச்சிகள், நாட்டுக்கூத்துகள் யாவும் எமது சமு தாயத்திலே புத்துணர்ச்சியையும், புதிய மறுமலர்ச்சியையும் ஏற் படுத்தியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

குருநகர் மக்களின் நலனுக்காக எதை எதைச் செய்யலாம் என்று சிந்தித்துச் சொல்வதோடு நில்லாது சொன்னதைச் செயற்படுத்து வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். உலக தரிசன இயக்கத்தினரின் உதவியைப் பெற்று பல பாரிய திட்டங்களை வகுத்து குருநகர் மக்களின் உயர்வுக்காகவும் சிறப்பாக வறுமைக்கோட்டின் அடித் தளத்திலேயுள்ள மக்களின் வாழ்வுக்காகவும் தன்னையே அர்ப் பணித்து வாழ்ந்த அருட்தந்தை அவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்து விட்டோம்? அவரது வெள்ளி விழாவை நன்றிப் பெருக்கோடு நோக்குகின்றோம், அவரது சேவையைப் பாராட்டுகின்றோம். இன்னும் பல்லாண்டு வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வெள்ளிவிழா மக்கள் விழாவாக குருநகர் மக்கள் அனைவரினதும் பங்களிப்புடன் சிறப்பாக கொண்டாடப் படுகின்றது. விழாவின் சிறப்பு நிகழ்வாக ''வெள்ளி விழா'' மலரொன்று வெளியிடப்படு கின்றது. இம் மலருக்கு ஆசிச் செய்தி தந்துதவிய யாழ் மறை மாவட்ட ஆயர், அருட்தந்தையர்கள், உலக தரிசன இயக்கப்பிரதி நிதி, கட்டுரைகள், கவிதைகள், எழுதியோர், விளம்பரங்கள் மூலம்

வாழ்த்துகளைத் தந்துதவிய சனசமூக நிலையங்கள், கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், வியாபார நிலையங்கள், தனிப்பட்ட குடும்பங்கள் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெள்ளிவிழா வெற்றி விழாவாக நடைபெற அயராது உழைக்கும் பக்திச் சபைகள், பங்குச்சபை உறுப்பினர்கள் சிறப்பாக தங்களால் இயன்ற உதவியை வழங்கிய குருநகர் மக்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

வெள்ளிவிழாத் திருப்பலியிலும் மாலை நடைபெறும் விழா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும் ஆயர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பிரமுகர்கள், வழிபாட்டிலே கலந்துகொள்ளும் பக்தர்கள், பேச்சாளர்கள், கலைஞர்கள், கலை நிகழ்ச்சிகளைத் தத்துதவுவோர், அன்பளிப்புச் செய்வோர், பொது ஸ்தாபனங்கள், பங்காளர்கள், பார்வையாளர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள், வெள்ளிவிழா மலரை அசசிட்டு உதவிய அன்னை அச்சகத்தினர் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

சி. தார்சிசியஸ்
பங்குச் சபை கௌரவ செயலாளர்

வேதத்தின் வித்துக்கள் முளை விட்டன
தீவக பூமியினிலே
மரியாம்பிள்ளையும் அன்னம்மாவும்
இணைந்து தந்தனர் இம்மானுவேலையே
கை கொடுக்கும் கல்விக்கு கைகொடுக்க
முழுமூச்சுடன் தொண்டாற்றினையே
விரக்தியுற்றோரின் கலங்கரை விளக்கென
ஏற்றிப் புகழ் சாற்றிடுவோமே!

எம் நிலையக் காப்பாளராய் நின்றவனே
எம்மை உடன்பிறப்பெனக் கொண்டவனே
உன் கைநீண்டு உயர்வு கொண்டோரில்
உம்மை போற்றி பறைசாற்றும்

குருநகர்

றெக்கிளமேசன் சனசமூக நிலையம்

கரம்பொனூர் தந்த வள்ளல்
கடவுளின் பணிக்காய் வாழ்ந்து
நிரந்தரம் சமூகத் தொண்டில்
நிற்பவர் நிறைந்த செம்மல்
இரந்திடு நிலையில் உள்ள
ஏழைகள் வறியர் யார்க்கும்
புரவலராக நிற்கும்
புண்ணியார் தந்தை வாழ்க!

இருபத்தைந் தாண்டின் மேலாய்
இறைபணி புரியும் ஐயா
அருமருந்தனைய தந்தாய்
அன்புடன் எங்கள் கோயிற்
திருவருள் வாய்க்க நின்ற
செல்வனே வாழ்த்துகின்றோம்.
தருமங்கள் பலவும் செய்து
தாரணி மீதில் வாழ்க!


குருத்துவ வெள்ளிவிழாக் காணும்
எமது பங்குத் தந்தை
வளமுடன் வாழ வாழ்த்தும்

**குருநகர்**
**கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்**

ஊருக்கு உழைப்பதில்
உறுதியாய் நின்றிடும்
உத்தம குருவினை
உள்ளம் மகிழ
வாழ்த்துகின்றோம்!

சகல விதமான இரும்புச் சாமான்,
சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
பெயின்ற் வகைகளை
மலிவு விலையில் பெற்றிட

**செல்வா ஹாட்வெயர்ஸ்**

**பாங்ஷால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.**

வெள்ளிவிழாக் காணும்
ஆன்மீக மருத்துவன்
ஆண்டாண்டு வாழ்க!

✲

சகல விதமான
மருந்து வகைகளுக்கும்
பால்மா வகைகளுக்கும்

✲

**சிற்றி மெடிக்கல்ஸ்**

யாழ்ப்பாணம்.

இன்னலுறும் மக்களின்
இதயக் கோவிலாய்
இனிய பண்பாளன்
இடரின்றி வாழ்க!

சுத்தமும் சுவையும் நிறைந்த
தேனீர், சிற்றுண்டிகளுக்கு

✲

**றியோ**
**தேனீர் சாலை**

பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமை: ஞா. இரத்தினம்

பங்குத் தந்தையின்
பணி சிறக்க
வாழ்த்துகின்றோம்!

✲

**குடும்பப் பூங்கா**

13 A, குருநகர் நவீன சந்தை,
பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

ஏழைக்கு உதவிடும்
ஏற்றமிகு பண்பாளன்
நித்தம் வாழ்ந்திட
நிமலனை வேண்டுவோம்!

✲

**S. P. பூண்டிமாதா**

(பலசரக்கு வியாபாரிகள்)

21, குருநகர் சந்தை,
யாழ்ப்பாணம்.

இறைபணியில் இருபத்தைந்தாவது ஆண்டில் திளைத்திருக்கும்
எம் பங்குத்தந்தை

**வணபிதா. இம்மானுவல் அடிகளார்க்கு**

காலம் தந்த வேளை — நீர்
எம் பங்குத் தந்தையானீர்
அறியாமை இருளில் தவித்த — எம்
மக்களுக்கு வழிகாட்டும் ஒளியானீர்
அல்லலுற்று கலங்கித் துடித்த — எம்
மக்களுக்கு அன்பு காட்டும் அன்னையானீர்
உம் தன்னலமற்ற சேவையால் — எம்
பங்கை சிறப்புடன் விளங்க வைத்திட்ட
உன்னத நற்குருவே
விழாக் கண்டிடும் இவ்வேளைதனில்
நீவிர் உடல் உள நலம் பெற்று வாழ
உம் உன்னத பணி சிறப்புற
உமது இறைபணி மேலும் வளர்ந்து
ஐம்பதாவது ஆண்டு நிறைவினைக் கண்டிட
எம் மன நிறைவான நல்வாழ்த்துக்களை
நாம் நவில்கின்றோம்.

புதுமைமாதா சனசமூகநிலைய
தலைவர், செயலாளர், அங்கத்தவர்கள்.

# வாழ்த்துகிறோம்

அருட்திரு P.M. இம்மானுவேல் அடிகளாரின் வெள்ளிவிழா வெறுமனே அவரது குருத்துவ வாழ்வின் கால அளவு மட்டுமன்று அதற்கும் மேலாக அவராற்றிய பணிகளை எண்ணிப் பார்க்கும் ஒரு விழாவாகவும் அமைகிறது அருட்கொடைகள், வழிபாடுகள், போதனைகள் என கோவிலுக்குள் மட்டும் தமது பணிகளை அடிகளார் முடக்கிக் கொண்டவரல்லர். வறுமையின் கோலங்கள் மீதும் அவர் கரங்கள் நீண்டன. வறியோர் மீது அவர் பார்வை திரும்பியது. அவர் தற்போது எம் பங்குகளில் ஆற்றி வரும் சமூகப்பணிகள் இதற்குச் சான்றுபகர்கின்றன.

சமூகப்பணி ஆற்றுவதினூடாக சமயப்பணிக்கு மக்களை ஈர்ப்பதில் அடிகளார் கண்ட வெற்றி இக்காலத்திற்கு ஏற்ற ஒரு முன்மாதிரியாகவே அமைகின்றது.

அவர் அமைத்த, அவர் கைக்கொள்ளும் புதிய பாதையில் அவர் பணி இன்னும் நீண்ட காலம் தொடர இறைவனை வேண்டுகிறோம்.

புதுமை மாதா ஆலய சபையினர்

அன்னை அச்சகம், மவுண்காமல் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

இறைபணியாற்றி
துயர்தனைப் போக்கும்
தூய எம் தந்தாய்
நின் புகழ் வாழி!

சகலவிதமான
இரும்புச் சாமான்களுக்கும்
சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கும்

✲

**S. T. ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

88, குருநகர் நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

உள்ளத்தின் ஆழத்தில்
உயர்ந்து நிற்பவனே!
வாழ்க நின் பணி!

✲

**சயினிஸ் றெஸ்ரூறன்**

உரிமையாளர் :
சி. கிருபாகரன்

4ம் குறுக்கு வீதி
குருநகர்
சின்னக்கடை, யாழ்ப்பாணம்

அருட்பணி புரியும்
அருட்தந்தை
ஆண்டாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்!

சகலவிதமான புடவை தினுசுகளுக்கும்
தயாரித்த ஆடைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

✲

**லைடன் காமென்ஸ்**

மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்.